செ.வெ.எண்:29 நாள்:14.06.2017

# பத்திரிக்கைச் செய்தி

## 2017–18 ஆம் ஆண்டிற்கான புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)

படித்த வேலைவாய்ப்பற்றவர்களை, முதலாம் தலைமுறை தொழில் முனைவோராக்கும் பொருட்டு தமிழக அரசு புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம் (நீட்ஸ்–NEEDS) என்ற திட்டத்தினை உருவாக்கியுள்ளது. 25% அரசு மானியத்துடன் கூடிய கடனுதவி திட்டத்தில் பட்டம், பட்டயம், தொழிற்கல்வி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட தொழில் பயிற்சி சான்றிதழ் பெற்ற இளைஞர்கள் மற்றும் மகளிர் இத்திட்டத்தின் கீழ் உடன் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுய தொழில் துவங்கி முதலாம் தலைமுறை தொழில் முனைவோரை உருவாக்க கீழ்க்கண்ட திட்ட மதிப்பீட்டில் கடன் உதவி மற்றும் மானியம் வழங்கப்படுகிறது.

**1. கடன் திட்டம் :**

இத்திட்டத்தின்படி உற்பத்தி மற்றும் சேவை தொழில்களுக்கு குறைந்த பட்சமாக ரூ.5.00 இலட்சத்திற்கும் அதிகபட்சமாக ரூ.1 கோடி வரை நிதியுதவி தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் மற்றும் தேசியமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் வழங்கப்படும்.

**2. கடன் பெற தகுதிகள் :**

- இத்திட்டத்தின் கீழ் கடன் பெற விண்ணப்பிக்கும் பொது பிரிவினருக்கு 21 வயது முதல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும். சிறப்பு பிரிவினருக்கு (பட்டியல் இனத்தவர்/பிற்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சிறுபான்மைனர்/திருநங்கைகள்/மாற்றுத் திறனாளிகள்/மகளிர்/மற்றும் முன்னாள் இராணுவத்தினர் ஆகியோர்களுக்கு வயது 45க்குள் இருக்க வேண்டும்.
- கல்வித் தகுதியாக பட்டம், பட்டயம், ஐடிஐ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் தொழிற் சார் பயிற்சி படித்த இளைஞர்கள் மற்றும் மகளிர் இத்திட்டத்தின் கீழ் உடன் விண்ணப்பிக்கலாம்.

. மத்திய மற்றும் மாநில அரசுகளின் இதர திட்டங்கள் மூலம் மானியத்துடன் கூடிய கடன் உதவி பெற்றவர்கள் இத்திட்டத்தின்கீழ் கடன் பெற இயலாது.

3. **கடன் பெற தகுதியான தொழில்கள்** :

பொருளாதார ரீதியாக சாத்திய கூறுள்ள அனைத்து உற்பத்தி மற்றும் சேவை தொழில்கள் தகுதியான தொழில்களாகும். மேலும் சுற்றுச் சூழலை பாதிக்காத மற்றும் எரிசக்தி தொடர்பான தொழில் நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அனைத்து வியாபார நடவடிக்கைகள், விவசாயம், மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியதால் "சிவப்பு வகை" தொழில்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள தொழில் வகைகள் தகுதியற்றதாகிறது.

4. **பயனாளிகள் பங்களிப்பு :**

இத்திட்டத்தின் கீழ் கடன் பெறும் பொது பிரிவு பயனாளிகள் தங்களுடைய பங்காக திட்ட மதிப்பீட்டில் 10 சதவிகிதம் செலுத்த வேண்டும். சிறப்பு பிரிவு பயனாளிகள் அதாவது பட்டியல் இனத்தோர், பட்டியல் இனத்தைச் சார்ந்த மலைவாழ் பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்டவர், சிறுபான்மையினர், மகளிர், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் 5 சதவிகிதம் தங்களது பங்கீடாக செலுத்த வேண்டும்.

5. **மானியம் :**

இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதமும் அதிகபட்சமாக 25 இலட்சமும் மானியமாக வழங்கப்படும். மேலும் இத்திட்டத்தில் 3 சதவீதமும் சுலப பின் முனை வட்டி மானியம் கடனை திருப்பி செலுத்தும் காலம் வரை வழங்கப்படும்.

மேலும் 2017–18ம் ஆண்டிற்கான கரூர் மாவட்டத்திற்கு மானியத் தொகைக்கான இலக்கு ரூ.190 இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில் 50 சதவீதம் பெண்களுக்கும் ஆதி திராவிடனருக்கு 18 சதவீதமும் பழங்குடியினருக்கு 1 சதவீதமும் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு 3 சதவீதமும் குறியீடாக ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, தகுதியான விண்ணப்பதாரர்கள் (www.msmeonline.tn.gov.in/needs) என்ற இணையதள முகவரியில் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பயன்பெற பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், சத்தியமூர்த்தி நகர், தாந்தோணிமலை, கரூர் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.